**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 178/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on .2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தமிழரசி Father's Name : சுப்ரமணி

துவக்க நேரம்: 03.20 P.M

**<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc படித்துள்ளேன். எனது திருமண தேதி தெரியுமா என்றால் தெரியும் ஆவணி மாதம் 26ம் தேதி 1992ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. எனது மகன் வழக்கறிஞர் என்றால் சரிதான். எனது கணவரும் வழக்கறிஞராக பணிபுரிந்தார் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கை எனது கணவர் அவருக்கு 19ம் வயது நிறைவடைந்து 20ம் வயதில் தாக்கல் செய்துள்ளார் என்றால் 19ம் வயதில் தான் தாக்கல் செய்தார். எனது கணவர் தாக்கல் செய்த இந்த தாவாவில் அவரது விலாசம் சின்ன அக்ரஹாரம் இராசிபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் மேற்கண்ட விலாசத்தில் குடியிருப்பதாக தான் திருத்தப்பட்ட வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நான் நாகியம்பட்டியில் தான்

வசித்து வருகிறேன். மேற்படி சின்ன அக்ரஹாரம் இராசிபுரம் விலாசத்தில் எனது மாமியார் குடியிருந்த வீட்டின் கதவு என்ன என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை அந்த வீடு சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்றால் மேற்படி வீட்டை எனது மாமியார் சிறிது காலம் வாடகைக்கு இருந்து பின்னர் தான் கிரையம் வாங்கினார். தற்பொழுது அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி வீடு யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் எனது மாமியாரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. எனது மாமியார் யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் அவரும் அவரது சகோதரியும் தனியாக வசித்து வருகிறார்கள். நான் அடிக்கடி அவரை சென்று பார்த்து வருகிறேன். அவர் எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் நாகியம்பட்டியில் எங்களது காட்டு கொட்டகையில் குடியிருந்து வருகிறார்.

3. தாவாவில் எனது மாமியாரின் திருமண தேதி குறிப்பிட்டுள்ளதா என்றால் 1952 ம் ஆண்டு ஐப்பசி மாதம் திருமணம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளோம். எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்று தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வெள்ளையூர் கிராமத்தில் திருமணம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளோம். எனது மாமியாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது மாமியாரையும் சேர்த்து நான்கு பெண் நபர்கள். எனது மாமியாரை அருணாச்சல கவுண்டர் இரண்டாவதாக திருமணம் செய்து கொள்வதற்கு, அவரும் அவரது தாயாரும் சொத்தை எழுதி வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதாக தாவாவில் குறிப்பிட்டுள்ள பட்சத்தில் வா.சா.ஆ-3ல் அது தொடர்பான வாசகம் இடம் பெற்றுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது மாமியாரின் திருமணத்திற்காகத்தான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி ஆவணத்தில் அருணாச்சலம் கையொப்பம் செய்துள்ளாரா

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அருணாச்சலம் என்பவர் தனித்தனியாக இரண்டு மனைவிகளுடன் நாகியம்பட்டியில் வசித்து வந்ததாக தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. எனது கணவர் இறந்த பொழுது வழக்கறிஞர் சேம நல நிதியிலிருந்து வழங்கப்படும் தொகையை பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக் கொண்டேன். அதற்காக சமர்பித்த விண்ணப்பத்தில் எனது கணவரின் பிறந்த தேதி என்ன என்று குறிப்பிட்டுள்ளது என்றால் மேற்படி விண்ணப்பத்தை வழக்கறிஞர் திரு.இராமலிங்கம் தான் பூர்த்தி செய்தார். அவர் என்ன தேதி குறிப்பிட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. மேற்படி விண்ணப்பத்தின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் நான் வீட்டில் தேடிப்பார்த்தால் தான் தெரியும். எனது கணவரின் பிறந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ள கல்வி சான்றிதழ்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. எனது கணவரின் கல்வி சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் பார்த்தால் தான் தெரியும். எனது கணவரின் கல்வி சான்றிதழ்களில் தாவாவில் குறிப்பிட்டுள்ள பிறந்த தேதிக்கு மாறுபட்ட தேதி உள்ளது என்பதால் தான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. எனது கணவர் பிறந்த பின்னிட்டு அவரும் அவரது பெற்றோர்களான அருணாச்சலம், பார்வதியம்மாள் ஆகிய மூவரும் நாகியம்பட்டியில் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்று தாவாவில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் கடந்த 1959 ம் ஆண்டு எனது மாமனார் மாமியார் இருவரும் மின்சார வாரியத்தில் மின் இணைப்பு கேட்டு வழங்கிய விண்ணப்பத்தையும், அது தொடர்பான ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளோம். மேலும் கடந்த 20.11.1956

ம் ஆண்டு எனது மாமனாரின் அத்தை எனது மாமியாருக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவணத்தில் முத்துகுமாரசுவாமி மகன் அருணாச்சல கவுண்டரின் மனைவி பார்வதியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது கணவரும் அருணாச்சலம், பார்வதியம்மாள் மூவரும் ஒரே வீட்டில் வசித்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்பதால் தான் நான் மேற்கண்டவாறு மழுப்பலான பதிலை கூறிகிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் கடந்த 1956 ம் ஆண்டிலிருந்து பார்வதியம்மாள் அவருக்கு ஆதரவாக உருவாக்கிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவாவில் அருணாச்சலம் அவரது வாழ்நாள் முழுவதும் குடிகாரராக இருந்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அவர் அதிகமாக குடித்ததால் தான் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார். அது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. தாவாவில் அருணாச்சலம் எனது மாமியாரின் சொத்தை எழுதி தர கேட்டார் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும், அவர் பெரும் நிலத்திற்கு சொந்தக்காரர் என்பதால் அவ்வாறு கேட்க வாய்ப்பு இல்லை என்றாலும், அதன் மூலம் தான் அருணாச்சலத்திற்கும், பார்வதியம்மாளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறுவது தவறு என்றாலும் சரியல்ல. பார்வதியம்மாளின் நிலமும், அருணாச்சல கவுண்டரின் நிலமும் ஒரே இடத்தில் அருகருகே அமைந்திருந்ததால் பார்வதியம்மாளின் நிலத்தை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று அருணாச்சலம் மிகவும் விரும்பி கேட்டு கொடுமைப்படுத்த ஆரம்பித்தார். மேற்படி பிரச்சனைக்கு பிறகு பார்வதியம்மாளும் அவரது மகனும் பார்வதியம்மாளின் தகப்பனார் வீட்டிற்கு துரத்தப்பட்டதாக கூறியுள்ள

நிலையில் எவ்வளவு நாட்கள் இருவரும் அங்கு இருந்தார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியாது.

7. கடந்த 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் எனது மாமியாரும் எனது கணவரும் நிரந்தரமாக எங்கு குடியிருந்தார்கள் என்றால் இராசிபுரத்தில் குடியிருந்து வந்தார்கள். நாகியம்பட்டிக்கும், வெள்ளையூருக்கும் இடையில் 35 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கலாம். அதேபோல் நாகியம்பட்டிக்கும் இராசிபுரத்திற்கும் இடையே 39 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கலாம். எனது மாமியாரையும் எனது கணவரையும் எனது மாமியாரின் அப்பா வீட்டிற்கு அருணாச்சல கவுண்டர் துரத்திவிட்டதாகவும் அதன் பின்னிட்டு மீண்டும் தொந்தரவு செய்ததால் எனது கணவரும் அவரது தாயாரும் இராசிபுரத்திற்கு சென்று விட்டதாக கூறியுள்ளது எனது சாட்சியத்திற்கு முரணாக இருந்தது என்றால் சரியல்ல.

8. தாவாவில் அருணாச்சல கவுண்டர் சொத்தில் பாகம் கோரப்பட்டுள்ளதா அல்லது முத்துகுமாரசுவாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் பாகம் கோரப்பட்டுள்ளதா என்றால் அருணாச்சல கவுண்டர் அவரது அப்பாவிடமிருந்து பாகப்பிரிவினை மூலம் அடைந்த பரம்பரை சொத்தில் பாகம் கோரியுள்ளோம். முத்துகுமாரசுவாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் பாகம் கோரவில்லையா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

9. 12.07.1965 ல் எனது மாமியார் தனக்காகவும், அவரது மகன் சுப்ரமணியத்தின் சார்பாகவும் அருணாச்சலத்திற்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு அருணாச்சலம் பார்வதியம்மாள் உடனான திருமணத்தை மறுத்தும் சுப்ரமணியன் தனக்கு பிறக்கவில்லை என்று ஒரு பொய்யான பதில் அறிவிப்பு

வழங்கியுள்ளதாகவும் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அருணாச்சல கவுண்டர் அனுப்பிய பதில் அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது, நான் அதை பார்த்ததில்லை. மேற்படி பதில் அறிவிப்பை பார்க்காமலேயே அது பொய்யான அறிவிப்பு என்று தாவாவில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனது கணவரின் முதல் சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது எனது கணவரின் கையொப்பமா என்றால் ஆமாம். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 04.07.2013 என்ற தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எனது கணவர் அந்த தேதியில் தான் கையெழுத்திட்டாரா என்பது எனக்கு தெரியாது.

10. எனது கணவர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் உண்மை தன்மையை நான் மறுக்கிறேனா என்றால் இல்லை. மேற்படி நிரூபண வாக்குமூலத்தை பிரதிவாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

(மேற்படி நிரூபண வாக்குமூலம் பிரதிவாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய இயலாது என்று வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் அது குறித்து தெளிவு படுத்த வேண்டி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

முடிவு நேரம்: 04.45 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt.S.Umamaheswari - O.S. No.178/2004 , Dt. 01.11.2025.